வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

தேதி: 28.09.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

நாட்டில் அனைத்து துறைகளிலும் பெண்கள் சவால்களை எதிர்கொண்டு சாதனைகளை படைத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பண்டிகை நாட்களில் சுதேசி பொருட்களை மட்டுமே வாங்கி கொண்டாடுவோம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தேசிய நிவாரண நிதியில் இருந்து 2 லட்ச ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து தீவிரவாத சவால்களை எதிர்த்து இந்தியா போராடி வருவதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கல்வியில் தொடங்கி அறிவியல் தொழில்நுட்பம் வரையிலான அனைத்து துறைகளிலும் பெண்கள் கடினமாக சவால்களை எதிர்கொண்டு மிகச் சிறந்த சாதனைகளை படைத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று அகில இந்திய வானொலியில் 126 ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் நாட்டு மக்களிடம் உரையாற்றினார். அப்போது நாட்டு மக்கள் சாதனைகளை பற்றி தெரிந்து கொள்வது தமக்கு உண்மையிலேயே சுகமான அனுபவத்தை அளிப்பதாக தெரிவித்தார். நிகழ்ச்சியில் அவர் இரண்டு பெரிய ஆளுமைகள் குறித்து பேசினார். தியாகி.பகத்சிங் மற்றும் பிரபல பின்னணி பாடகர் லதா மங்கேஷ்கர் ஆகியோரின் பிறந்த நாளை அவர் குறிப்பிட்டு பேசினார். நாடு முழுவதும் உள்ள இளைஞர்களின் ஊக்கத்தின் ஊற்றாக தியாகி பகத்சிங் திகழ்கின்றார் என பிரதமர் கூறினார். அஞ்சாமை என்பது அவரது இயல்பான குணமாக விளங்கியதாகவும், நாட்டுக்காக தூக்கு மேடை ஏறும் முன்பு அவர் ஆங்கிலேயர்களுக்கு எழுதிய கடிதத்தில் தன்னையும், தன்னுடைய சகாக்களையும் போர் கைதிகளை போன்று நடத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டதை பிரதமர் சுட்டிக்காட்டினார். தங்களது உயிர் தூக்கு மேடையில் அல்ல, துப்பாக்கியால் சுடப்பட்டு உயிர் போக வேண்டும் என்று பகத்சிங் எழுதிய

கடிதத்தை பிரதமர் நினைவுகூர்ந்தார். தியாகி பகத்சிங்கிற்கு தாம் அஞ்சலி செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும், லதா மங்கேஷ்கரின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை பிரதமர் சுட்டிக்காட்டினார். நாட்டின் கலாச்சாரத்திலும், இசையிலும், லதா மங்கேஷ்கர் ஆர்வம் கொண்டிருந்ததாக பிரதமர் தெரிவித்தார்.

நவராத்திரி தொடங்கியுள்ள இந்த வேளையில், கல்வி தொடங்கி அறிவியல் வரை அனைத்து துறைகளிலும் பெண்கள் கொடி நாட்டி வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். கடினமாக சவால்களை எதிர் கொண்டு கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு மகளிர் வெற்றி பெற்று இருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

இந்திய கடற்படையின் இரண்டு சாகசம் மிக்க அதிகாரிகள் நவீனா சாகர் பரிக்கரமா வின் மூலம் இந்த சாதனை செய்து காண்பித்திருப்பதாக பிரதமர் பாராட்டு தெரிவித்தார். இச்சாதனை புரிந்த லெப்டினன்ட் கமாண்டர் தில்னா, மற்றும் லெப்டினன்ட் கமாண்டர் ரூபாவுடன் பிரதமர் கலந்துரையாடினார். சாகர் பரிக்கரமாவில் இரண்டு அதிகாரிகளின் அனுபவங்களை நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார். மனஉறுதி, நெஞ்சுரம் என்றால் என்ன

என்பதை இந்த இரண்டு அதிகாரிகளும் இணைந்து நிருபித்துள்ளனர் என்றும் பிரதமர் தெரிவித்தார். அவர்கள் இருவருக்கும் பிரதமர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

தற்போது பண்டிகை அடுத்தடுத்து வர இருப்பதை சுட்டிக் காட்டிய பிரதமர் இந்த முறை ஜிஎஸ்டி சேவையால் பண்டிகைகளை சிறப்பாக கொண்டாட முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார். பண்டிகை நாட்களில் சுதேசி பொருட்களை மட்டுமே வாங்கி கொண்டாடுவோம் என்று நாம் மனதில் உறுதி கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார். நம் நாட்டில் பண்டிகைகள் எப்போதும் நிறைந்திருக்கும் என்றாலும், தீபாவளி விழா ஒரு மகா விழாவாக கருதப்படுகிறது என்றும் பிரதமர் தெரிவித்தார். நாடு தற்சார்புடையதாக மாற வேண்டும் என்றால் அதற்கான சுதேசி பாதையை நாம் முன்னெடுத்து செல்ல வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

வரும் அக்டோபர் 2 ஆம் தேதி காந்தி ஜெயந்தி பண்டிகை கொண்டாடப்பட உள்ளதால் இந்நாளில் ஏதாவது ஒரு காதிப் பொருளை வாங்க வேண்டும் என்று பிரதமர் நாட்டு மக்களை கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில், தமிழகத்தை சேர்ந்த அசோக் ஜெகதீசன், பிரேம் செல்வராஜ்

ஆகியோர் தங்களது கார்ப்ரேட் வேலைகளை விட்டுவிட்டு புல் மற்றும் வாழை நார்களால் யோகா பாய் தயாரித்து விற்பனை செய்து வருவதை பிரதமர் சுட்டிக் காட்டினார். அவர்களுக்கு பிரதமர் பாராட்டும் தெரிவித்தார். சத்பூஜை குறித்து பேசிய பிரதமர் இது ஒரு புனிதாமான நாள் என்றும், இது தீபாவளிக்கு பிறகு வருவதாகவும், இது சூரிய பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நாள் என்று குறிப்பிட்டார். மேலும், இது நாட்டின் பல்வேறு பகுதிகளில் மட்டும் கொண்டாடப்படுவதில்லை. இது ஒரு உலகளாவிய பண்டிகையாக மாறி வருவதாக அவர் தெரிவித்தார். மேலும், இந்த சத் பண்டிகையை யுனஸ்கோ அமைப்பின் கலாச்சார பண்டிகையில் சேர்க்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

*சேவா சப்தாஹ்- ஜன் தன் ே□ாஜ□ ா* 1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மக்கள் சேவை-நல்லாட்சி என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. அரசின் பல்வேறு முயற்சிகளால், ஜன் தன் யோஜனா திட்டத்தின் குறித்து, இன்று, சேவைத் திருவிழா என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம். ..........

(வாய்ஸ்)

*சேவா சப்தாஹ்- ஜன் தன் ே□ாஜ□ ா* 2 (9)

நாட்டில் உள்ள அனைவருக்கும் வங்கி சேவை மற்றும் நிதியுதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசு கொண்டு வந்த பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா திட்டம் இன்று ஒரு புதிய மைல் கல்லை எட்டியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 56 கோடிக்கும் அதிகமான வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டு, மத்திய அரசின் பல்வேறு திட்டங்களை ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு அரசு அளித்து வருகிறது. ஜன் தன் யோஜனா திட்டம், குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்கள், ஒதுக்கப்பட்ட சமூகத்தினருக்கு நிதி சார்ந்த நன்மை வழங்குவதில் முக்கிய

பங்கு வகிக்கிறது. இதுகுறித்து பிரதமர் திரு. நரேந்தி மோடி பேசுகையில்.......

(வாய்ஸ்-மோடி 2)

*சேவா சப்தாஹ்- ஜன் தன் ே□ாஜ□ா 3 (10)*

பிரதமரின் ஜன் தன் யோஜனா திட்டம் நிதி, கல்வியறிவு மற்றும் கடன் காப்பீடு, ஓய்வூதிய வசதிகளை பெற உதவி செய்கிறது. மேலும், இது, நகர்புற மற்றும் கிராமப்புற பகுதிகளை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தில் பூஜ்ய இருப்பில் கணக்கு திறக்கப்பட்டு, பயனாளிகளுக்கு ஒரு உள்நாட்டு டெபிட் கார்டு வழங்கப்படும். ஜன் தன் யோஜனா திட்டத்தில் 66.6 சதவிகிதம் பெண்கள் வங்கி கணக்குகளை வைத்துள்ளதாகவும், 35.37 கோடி ஜன் தன் வங்கி கணக்குகள் கிராமப்புற மற்றும் அரை நகர்புறங்களில் உள்ளதாக நிதி அமைச்சகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது. இதன் மூலம் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு ஊக்கியாகவும் அரசு செயல்பட்டு வருகிறது.

கரூர் (16)

தமிழகத்தின் கரூரில் நேற்று நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பேரணியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது. மருத்துவ கல்வி இயக்குநரின் இயக்குநரின் தகவலின்படி, 81 பேர் சிகிச்சையில் உள்ளதாகவும், மேலும் இரண்டு பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கரூரில் நடந்த துரதிஷ்டவசமான சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து 2 லட்ச ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார். முன்னதாக, இன்று மருத்துவமனைக்கு வருகை தந்த தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் காயமடைந்தவர்களை சந்தித்து பேசினார். பின்னர், விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்ச ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 1 லட்ச ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

ஜிஎஸ்டி- 1 (8)

நாட்டில் தற்போது அமலாகி வரும், அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மறைமுக வரிக் கட்டமைப்பை எளிமைப் படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளன. இதுவரை 4 அடுக்குகளாக இருந்த ஜிஎஸ்டி கட்டமைப்பு, 5 சதவிகிதம், 18 சதவிகிதம் என, 2 அடுக்குகளாக குறைக்கப் பட்டுள்ளது. வீட்டு உபயோகம் மற்றும், மாணவர்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்கள், மற்றும் சேவைகள் மீதான வரிக் குறைப்பினால், மக்கள் மீதான வரிச் சுமை கணிசமாக குறைந்துள்ளது. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு....

(வாய்ஸ்)

ஜிஎஸ்டி- 2 (7)

விவசாயத் துறையில் மக்கான சார்ந்த சிற்றுண்டிகளுக்கான ஜிஎஸ்டி வரி விகிதங்களை மத்திய அரசு 12 சதவிகி த்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைத்துள்ளது. இந்த வரிக்குறைப்பு உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் உற்பத்தியை மிகவும் போட்டித் தன்மை கொண்டதாக மாற்றும். பழவகைகள், ஜாம்கள் மற்றும் ஊறுகாய்களுக்கான ஜிஎஸ்டி வரி 12 சதவிகித்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டதால் இது உள்ளூர்

தொழிலாளர்களுக்கு பலனளிக்கும். மேலும் நுகர்வோர் தேவையையும் அதிகரிக்கச் செய்யும்.

ஜெய்சங்கர் (11)

நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து தீவிரவாத சவால்களை எதிர்த்து போராடி வருவதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். ஐநா பொதுச் சபையில் உரையாற்றிய அவர், உலகளாவிய தீவிரவாத தின் மையமாக அண்டை நாடு திகழ்வதாக பாகிஸ்தானை மறைமுகமாக குறிப்பிட்டார். நாடு சுதந்திரம் அடைந்த காலத் தில் இருந்து தீவிரவாத சவால்களை எதிர்த்து இந்தியா போராடி வருவதாகவும் அவர் தெரிவித்தார். பல ஆண்டுகளாக சர்வதேச தீவிரவாத தாக்குதல்களை இந்தியா எதிர் கொண்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த ஏப்ரல் மாதத்தில் பஹல்காமில் சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டது தீவிரவாத தாக்குதலுக்கு ஒரு உதாரணம் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

பிஜேபி அலுவலக திறப்பு (8)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில் உள்ள தீன் தயாள் உபத்யாயா அலுவலக வளாகத்தில் புதிய பிஜேபி அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகிறார். இந்த அலுவலகம் வெறும் பணியிடம் மட்டுமன்றி கட்சியின் கலாச்சாரம், உணர்வு, தொழிலாளர்களின் மதிப்பு மையமாக திகழும் என்று டெல்லி பாஜக தலைவர் திரு வீரேந்திர சச்தேவா தெரிவித்துள்ளார். திறப்பு விழா நிகழ்ச்சியில் கட்சியின் தேசிய தலைவர் திரு ஜே பி நட்டா, கட்சியின் மூத்த தலைவர்கள், மத்திய அமைச்சர்கள், தொண்டர்கள் பங்கேற்பார்கள் என்றும் அவர் கூறினார்.

*வானிலை* (3)

அடுத்த 3 முதல் 4 நாட்களுக்கு தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் உள்ளிட்ட இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புகள் உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.